சிலுவையே உயிர் தரும் மரம் என குருத்து ஞாயிறு நமக்குச் சொல்கிறது

– திருத்தந்தை 16ம் பெனடிக்

சில ஆண்டுகளுக்குப் பின் ஜெர்மானிய ஆக்கிரமிப்பில் இருந்த போலந்து நாட்டின் அஸ்வித் சித்ரவதை முகாமில் மற்றொரு கைதிக்காக அவர் தனது உயிரைக் கொடுத்தார். மெது மரணத்தை ஏற்படுத்தும் நச்சு அமிலம் கொடுக்கப்பட்டது. அஸ்வித் சித்ரவதை முகாமை, “நவீன உலகின் கொல்கொதா” என புனித 2ம் ஜோன் பவுல் வருணித்தார்.

மற்றொருவருக்காக தனது உயிரைக் கொடுத்து, ஆண்டவரின் பாடுகளை அனுபவித்த புனித மெக்சிமிலியன், கடைசி நேரம் வரை ஒன்பது கைதிகளுக்குப் பணி புரிந்தார். இரத்தத்தைச் சிந்தி ஆன்மாகளுக்கு மீட்பளித்த ஆண்டவரின் மகத்துவத்தை வியக்கத்தக்க வகையில் எழுதினார். இன்னும் பல ஆன்மாகள் தூய்மையும் மீட்பும் பெறப் பணிபுரிவதே, அப்போஸ்தலிக்க வாழ்வின் தலையாய பணி என்றார்.

எசாயா 50ம் அதிகாரத்தில் நாம் படிக்கும் துன்புறும் ஊழியனைப் பிரதிபலிக்கும் வகையில் புனித மெக்சிமிலியனின் தியாக வாழ்க்கை அமைந்திருக்கிறது. கடைசி நேரம் வரை அன்பே முதன்மையானது என்பதை அறிந்து திருவுளத்திற்கு தம்மையே ஒப்புக் கொடுத்தார். ஆண்டவரின் பாடுகளிலும் இதனையே காண்கிறோம். கடவுளின் அன்பின் ஆழம் வெளிப்படுகிறது. வெறும் சாவு வரை அல்லாமல் வாழ்வின் நிறைவு வரை இயேசு அவர் எடுத்துச் சென்றார்.

இவ்வாரம் கிறிஸ்துவோடு நாம் பயணம் செய்யும் போது நமது உள்ள உணர்வுகளை உணருவோம். வெற்றி வாகையோடு எருசல ஆலய வருகை, “என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்” என்பதோடு முடிவது பெரும் வேதனையைத் தருகிறது. ”இயேசு கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொள்ளவில்லை, தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று, சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்படிந்தார். எனவே கடவுள் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலாக பெயரை அவருக்கு அருளினார்” (பிலி.2:6-22) என பிலிப்பியர்க்கு எழுதிய கடிதத்தில் புனித பவுல் குறிப்பிட்டிருக்கிறார்.

**கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதே நமது வாழ்க்கைப் பயணம்.** அவரைப் பற்றிக் கொண்டு வாழ்ந்தால், அவரில் உயிர்ப்பை அனுபவிப்போம். கிறிஸ்துவின் பாடுகளை உள்வாங்கிக் கொண்டு, அவரோடு உயிர் துறந்தோம் என்றால் அவரோடு நாம் உயிர்த்தெழுவோம். அவரது பாடுகளையும் மரணத்தையும் வாழ்ந்து காட்டினால் மட்டுமே அவரது உயிர்ப்பில் நாம் வாழ முடியும்.

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொள்ள நாம் தயாராகயிருக்கிறோமா? ✝

**இன்றைய வாசகங்கள்:**

எசா. 50: 4-7

திபா. 21: 8-9, 17-20, 23-24

பிலி. 2: 6-11

மத். 26: 14-27:66

வாரம் ஒரு வசனம்

கிறிஸ்துவைப் பற்றிக் கொள்வதே நமது வாழ்க்கைப் பயணம்

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

5 ஏப்ரல் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

குருத்து ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

**பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்**



# கிறிஸ்துவின் பாடுகளை உணர்ந்து வாழ்வது

ஆண்டவரின் பாடுகளை நினைவுகூரும் குருத்து ஞாயிற்றுக்கிழமையில், புனித மெக்சிமிலியன் கோல்பேயின் மறைசாட்சி மரணம் ஞாபகத்திற்கு வருகிறது. அவரது 10 வயதில் காட்சியளித்த அமலோற்ப மாதா, தூய்மையையும் மறைசாட்சி மரணத்தையும் குறிக்கும் வெள்ளை நிற கிரீடத்தையும் சிவப்பு நிற கிரீடத்தையும் அவருக்குக் கொடுத்தார்.



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மார்ச் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
***கடவுள் உன்னில் பேருவகை கொண்டுள்ளார்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: குருத்து ஞாயிறு 04 - 12 ஏப்பிரல் 2020**
எசாயா 50: 4-7 தி.பா: 22: 7-8, 16-17, 18-19, 22-23 பிலிப் 2: 6-11 மத்தேயு 26: 14-27; 66
**" என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்.?" - தி.பா 22**

| | | | |
|---|---|---|---|
| சனி | 04 | **திருப்பலி நடைபெறாது** | |
| ஞாயிறு | 05 | **திருப்பலி நடைபெறாது<br>குருத்து ஞாயிறு** | **மறைக்கல்வி , மற்றும் கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்கள் வகுப்புகள் நடைபெறாது** |
| திங்கள் | 06 | திருப்பலி நடைபெறாது | |
| செவ் | 07 | திருப்பலி நடைபெறாது | |
| புதன் | 08 | திருப்பலி நடைபெறாது | |
| வியா | 09 | திருப்பலி நடைபெறாது | **புனித வியாழன்** |
| வெள் | 10 | திருப்பலி நடைபெறாது | **புனித வெள்ளி** |

*கொவிட் 19 முன்னிட்டு ஹெறால்ட் வார இதழ் அச்சிடப்படாது.*
*மீண்டும் இயல்பு நிலைக்கும் திரும்புவரை*
*இந்த இதழை இணையத்தின் மூலம் வாசிக்கலாம்:*
*www.heraldmalaysia.com*

**உயிர்ப்பு ஞாயிறு**
தி.பணி 10 :34, 37-43 தி.பா: 118: 1-2 16-17, 22-23 கொலோ 3: 1-4 யோவான் 20: 1-9
**" ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே என்று அக்களிப்போம் அகமகிழ்வோம்." - தி.பா 118**

| | | | |
|---|---|---|---|
| சனி | 11 | **திருப்பலி நடைபெறாது<br>பாஸ்கா திருவிழிப்பு** | |
| ஞாயிறு | 12 | **திருப்பலி நடைபெறாது<br>உயிர்த்த ஞாயிறு** | **மறைக்கல்வி , மற்றும் கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்கள் வகுப்புகள் நடைபெறாது** |

கொரோனோ நோய் தொற்று காரணமாக உயிரிழந்த அனைவருக்காகவும் மன்றாடுவோம். மேலும் இதற்காக உழைக்கும் மருத்துவர்கள் மற்றும் இதன் தொடர்பாக பணி செய்பவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்காக நம் செபங்களை ஒப்புக்கொடுப்போம்.

**2020 மார்ச்** ***<u>(பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>***

1. **பங்கு காணிக்கை**:
28/29 மார்ச் ________

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.***
பெட்ரிஸ் பேட்ரிக் - இறப்பு: 31- 03 - 2020
***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக***

**2) <u>பமமேப உணவு வங்கி:</u>** பங்கின் மனித வள மேம்பாட்டின் உணவு வங்கிக்கு நீங்கள் தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவுக்கு மிக்க நன்றி. எங்களுக்கு தேவை யானவை: அரிசி,மைலோ, பால்மாவு, போத்தல் சமையல் எண்ணெய், சார்டின், பிஸ்கெட்டுகள். எந்த அளவுகளில் வேண்டுமானாலும் நீங்கள் வழங்கலாம். கூடுதல் விவரங்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) பெர்னதெத் (012-2715840) இவர்களைத் தொடர்பு கொள்ளவும். தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**3) <u>பங்கு அலுவலகம் 2020 ஏப்பிரல் 1 - 14 வரை, மூடப்பட்டிருக்கும்</u>** அவசர உதவிகளுக்காக அழைக்க: நாதன் (012-684 0750) அல்லது
கொலின்ஸ் (016 364 7506)

4) **விவிலிய அறையை ஆராதனை இல்லம்/ தியான இல்லமாக மாற்ற தேவைப்படும் சீரமைப்பு செலவுகளுக்காக,** உங்களிடமிருந்து நன் கொடைகளை எதிர்ப்பார்க்கின்றோம். தற்சமயம் இதற்கான நிதியை இனையத்திவழியாக பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- என் அன்பான சகோதர சகோதரிகளே! கடவுளின் குணம், மீண்டும் மீண்டும் கொடுத்துக்கொண்டே இருப்பது. இயேசு எதையும் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல், நமக்காக தம் இன்னுயிரை சிலுவை மரத்தில் கையளித்தார். நம் வாழ்வில் இதுவரை அனுபவித்திராத நடமாட்டக் கட்டுப்பாட்டை இந்தப் புனித வாரத்தில் நாம் காண்கிறோம். ஆனால் இந்த புனித வாரத்தில் இல்லங்களில் இருந்தவாறே, உங்கள் உள்ளத்தை மூடிவைத்திராமல் முழுவதுமாக திறந்து வையுங்கள்.
செபிப்பதில், தியானிப்பதில், ஒறுத்தல் முயற்சிகள் செய்வதில் அவரோடு நெருக்கமாக இணைந்திருங்கள். கவனமோடு இருங்கள். ஆண்டவருடனான இந்த நெருக்கம், கொவிட் 19 வைரசால் பாதிக்கப்பட்டிருப்போருக்காக செபிப்பதிலும், இருக்கட்டும். இந்தப் புனித வாரத்தில் ஒரு நாளை தேர்ந்தெடுத்து, பாதி நாள் உண்ணா நோன்பு இருங்கள். முடிந்தால், புனித வெள்ளியன்று முழு நாள் உண்ணா நோன்பிருங்கள்.
உங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆவியை சோம்பலாக்காதீர்கள். விழிப்போடும், உயிர்ப்பையும் நோக்கிய பார்வையாகவும் இருக்கட்டும். உங்களுடைய விழ்ப்புணர்வால், மகிமையின் பரிசான அமைதியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

  அருட்பணி கென்னத் மற்றும் நானும் ( அருட்பணி சேவி) இருவெளம் எங்களுடைய புனித வார திருப்பலிகளை உங்கள் அனைவரின் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கிறோம். உங்கள் அனைவரும் ஆசீர்வாதம் நிறைந்த ஈஸ்டர் வாழ்த்துகள். இறைவனின் ஆசீரை இந்த ஈஸ்டர் நாளில் நிறைவாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.
  (1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
  (2) விழிப்பு செபங்கள் மற்றும் இறப்புச் சடங்கு, பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
  (3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

- **ஏப்ரல் மாதத்தில்** முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- இணையத்திவழி வார நாட்கள் மற்றும் வார இறுதி திருப்பலிகளைக் காண நேர அட்டவனை( ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 5 வரை)
  01-04-2020 (புதன்) மாலை 6.00 மணி - திருப்பலி - ஆங்கிலம் / தேசிய மொழி
  02-04-2020 ( வியாழன்) மாலை 6.00 மணி - திருப்பலி - ஆங்கிலம் / தேசிய மொழி
  03-04-2020 (வெள்ளி ) மாலை 6.00 மணி - திருப்பலி - ஆங்கிலம் / தேசிய மொழி
  04-04-2020 (சனி) மாலை 5.00 மணி - திருப்பலி - தேசிய மொழி ) குருத்து ஞாயிறு திருப்பலி)
  05-04-2020 ( ஞாயிறு) குருத்து ஞாயிறு காலை 8.00 மணி திருப்பலி - தமிழ்
  காலை 10.00 மணி - திருப்பல -ஆங்கிலம்
  பகல் 12.00 மணி - திருப்பலி ( மெண்டரின்)

  திருப்பலிகளை ***www.Tv.ArchKL.org*** ***இணையத்தின் வழி காணுங்கள்***

- ஒவ்வொரு வாரமும் திருப்பலியின் போது நீங்கள் வழங்கிக் கொண்டிருந்த காணிக்கை, திருப்பலி கருத்துகள், மற்றும் உங்கள் நிதியைத் தர விரும்புவோர் பங்கின் வங்கிக் கணக்கில் இணையத்தின்மூலம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.
  1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
  2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
  3.வங்கிக் கணக்கு எண் **:3121194612**
  உங்களின் இணையத்தின் வழி பணம் செலுத்தும்போது, கீழ்க்கண்ட தகவல்களை தெரிவியுங்கள்.இதனால் பங்கு அலுவலகத்தின் கணக்குகளை சரிபார்க்க முடியும்.
  1. செலுத்தும் தொகை
  2. பணம் செலுத்தும் நோக்கம் ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று)
  அ. திருப்பலி கருத்துகள் ( பெயர்) ஆன்மா இளைப்பாற்றி/நன்றியறிதல்/ தனிப்பட்ட கருத்துகள்
  ஆ. பங்கு நன்கொடை / தியான அறை சீரமைப்பு

தொகை செலுத்திய உங்கள் ரசீதை பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும். serembanvisitation@gmail.com